**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.** 38/2022
Date: 25.06.2025.
வா.சா.1 - திரு.குமார பெருமாள்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

3ம் பிரதிவாதியை நாங்கள் இவ்வழக்கில் கட்சியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கில் இ.ம.எண்.4/2022ல் எதற்காக போடப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த மனுவின் படி 3ம் பிரதிவாதி இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கப்பட்டார் என்றால், சாட்சி எனக்கு புரியவில்லை என்கிறார். அந்த மனுவில் ராமர்கோவில் இந்து அறநிலையதுறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்ட உத்தரவு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் பட்டா எண்.8424 என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது அந்த பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா என்றால், சரிதான். அது பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பாட்டாவில் முதல் பெயர் கல்படி ஸ்ரீராமர் கோயில் வகைக்கு என்று உள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–1 பட்டா தொடர்ந்து ஸ்ரீராமர் கோயில் பெயரில் தான் உள்ளது என்றால், ஸ்ரீராமர் கோயில் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர் இருவர் பெயரிலும் பட்டா தொடர்ந்து இருந்து வருகிறது. 1997ம் ஆண்டு கோயிலை இந்து அறநிலையதுறையில் ஆளுகையில் கொண்டுவரும்போது மேற்படி கோயிலின் சொத்துகள் முறையற்றவகையில் பராதீனப்படுத்தியதாக குற்றசாட்டும் கூறப்பட்டது என்றால், சரியல்ல. 1965ல் வெங்கடேஸ்வர ஐயர் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை நான் பார்த்ததில்லை. இந்த சொத்து தேவஸ்வம் வகை

சொத்து என்றுதான் வா.சா.ஆ–1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1ல் பக்கம் 5ல் 9ம் கண்ணாறு 52ல் தானம் கரமொழிவு சர்வே என கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ–1 ஆவணம் அசல் தாக்கல் செய்யவில்லை. அதன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–1 மட்டும் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–2 ஆவணம் தபசில் சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்ற ஆவணம் ஆகும். வா.சா.ஆ–1 ஆவணத்தின் அடிப்படையில் வாங்கப்பட்ட சொத்திற்கு கிழக்கு பக்கம் வா.சா.ஆ–2ன் படியான சொத்து அமைந்துள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ–1ல் கிழக்கு எல்கை தேவஸ்வம் வகை செங்கல் சூளை வகை கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.2ல் , வா.சா.ஆ–1ன் படியான சொத்தை மேற்கு எல்கையாக குறிப்பிட்டுதான், வாங்கியிருக்கிறோம். எனவே தேவஸ்வம் வகை சொத்து என்று சொல்லாமல் நாங்கள் ஆவணங்களை பிறப்பித்துள்ளோம் என்றால், சரியல்ல. பட்டா எண். 4052 வழக்கு சொத்திற்கு எந்தகாலத்தில் கொடுக்கப்படவில்லை என்றால், சரியல்ல. கொடுக்கப்பட்டிருந்தது. எந்த கால கட்டத்தில் அவ்வாறு 4052 பட்டா எண், வழக்கு பட்டிகை சொத்திற்கு கொடுக்கபட்டிருந்தது என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பட்டா புத்தகம் வா.சா.ஆ– 4 ல் பட்டா பெயர் மாற்ற உத்தரவு விபரங்கள் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால், சரிதான். அந்த பட்டா புத்தகம்எனது மாமியார் ராஜேஸ்வரிக்கு எப்போது வழங்கப்பட்டது என்ற விபரமும் வா.சா.ஆ 4ல் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.4 வரிசையில், பட்டா எண். 8424க்கு பட்டா

புத்தகம் தாக்கல் செய்திருக்கிறேன், அதில் பெயர் மாற்றம் எந்த தேதியில் பட்டா பெயர் மாற்ற உத்தரவு வழங்கப்பட்டது என்ற விபரங்கள் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ 4 ன் வரிசையில் உள்ள இரண்டு பட்டா புத்தகங்களும் அடித்தல், திருத்தல்களுடன் காணப்படுகின்ற என்றால், சரிதான். சொத்தின் சர்வே எண் யாரால் பதிவேற்றம் செய்யப்பட்டது என்பதற்கு கையொப்பமோ, சுருக்கொப்பமோ, அலுலவக முத்திரையே பதியப்படவில்லை என்றால், சரிதான். இந்த இரண்டு பட்டா புத்தகங்களும் என்றால் இந்த வழக்கிற்காக போலியாக தயார் செய்யப்பட்டவை என்றால், சாட்சி பதில் ஏதும் கூறுவில்லை. பின்னிட்டு சாட்சி இல்லை என்று கூறுகிறார். 1966 ம் ஆண்டிற்கு முன்பு வில்லங்கம் சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். சொத்தை கிரையம் வாங்கவதற்கு முன்பு வில்லங்கம் பார்க்கப்பட்டதா என்ற விபரம்எனக்கு நேரடியாக தெரியாது என்றால், மாமி பார்த்திருப்பார். வா.சா.ஆ–3 ன் படி 2007 ல் தான்வில்லங்கம் எடுத்து பார்க்கப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். 2007 ம் ஆண்டு முதல் வழக்கு சொத்து குறித்து இந்துஅறநிலைய துறையினரால் அளவீடுகள் செய்யப்பட்டன என்றால், அதுவிபரங்கள் எனக்கு தெரியாது. 42/14 ன் மொத்த சொத்தின் விஸ்தீரனம் 86 சென்டு. 42/15 ன் மொத்த விஸ்தீரணம் 50 சென்டு. தற்போது என்னிடம் காட்டப்படும் கர ரசீதுகள் வா.சா.ஆ.7, 11, லும் 42/14 வீதம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்டிப புலஎண்ணில் திருக்கோயிலுக்கும் உரிமையுள்ளது. திருக்கோயிலுக்கு எவ்வளவு உரிமை என்று எனக்கு தெரியாது என்றால், எங்களுக்கு 62 சென்டு. எனக்கு கிரையம் கொடுத்த நபருக்கு எப்படி உரிமைகிடைத்தது என்ற விபரம் எனக்கு தெரியாது.

எந்த காலகட்டத்தில் இருந்து திருக்கோயில் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது மாமியார் விலைக்கொடுத்த நான் குறிப்பிடும் முன்ஜென்மிக்கு பட்டா இருந்ததாகவும், அவர் அதற்கு கரதீர்த்தாகவோ நான் ஆவணம்எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொள்வதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு உத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.